2016 டிசம்பர் 06ஆந் திகதியின் சபை அலுவல்கள்

திகதி : 2016-12-06

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

மனுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினரினால் பொதுமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

(i) கௌரவ மஹிந்த அமரவீர
(ii) கௌரவ திலிப் வெதஆரச்சி - நான்கு மனுக்கள்
(iii) கௌரவ வசந்த அலுவிஹாரே - இரண்டு மனுக்கள்
(iv) கௌரவ சாலிந்த திசாநாயக்க
(v) கௌரவ சீ. பீ. ரத்நாயக்க
(vi) கௌரவ லக்கி ஜயவர்தன
(vii) கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன
(viii) கௌரவ புத்திக பத்திறண - ஐந்து மனுக்கள்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 23(2) இன் கீழான வினாக்கள்

(i) கௌரவ தினேஷ் குணவர்தன

ஹுடைடா துறைமுகத்தில் பயங்கரவாதக் குழுவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 9 இலங்கை மாலுமிகளையும் விடுவித்தல் தொடர்பானது

(ii) கௌரவ அநுர திசாநாயக்க

பெரும்போகத்திற்கான உர மானியம் வழங்கப்படாமை தொடர்பானது

இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) - குழு

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (2017) ஒதுக்கப்பட்ட இருபத்தொராம் நாள் இன்றாகும். - " குழு நிலை விவாதம்"

ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை

“ரூபா பெறுமதியின் தேய்மானம்” தொடர்பான ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை கௌரவ பந்துல குணவர்தன அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து, 1855 மணியளவில் பாராளுமன்றமானது 2016 டிசம்பர் 07ஆந் திகதி புதன்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

[வரவு செலவுத் திட்டம் 2017]

** இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.*